**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 240/2019**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.09.2025 | தகப்பனார் பெயர்: | ராமச்சந்திரன் |
| பெயர்: | ரவிச்சந்திரன் (PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | மாதானம் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 41/2025 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 09.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.52)**

1. நான் எந்த புல எண் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 269 ஆகும். என்ன பரிகாரம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இதே வழக்கு சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் தரப்பில் எங்கள் மீது OS.209/2018 என்ற எண்ணில் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் நாங்கள் எதிர் கட்சி நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நான் இந்த வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை OS.209/2018 வழக்கில் எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல.

2. தாவா சொத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்குரையில் நான்கெல்லை குறித்து நான் கூறியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக OS.209/2018 ல் இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக IA.747/2018 மனுவில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1

ஆவணத்தில் தாவா சொத்தை பொறுத்து எந்த பதிவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் தாவா சொத்தை பொறுத்து எந்த பதிவும் இல்லை என்றால் சரியல்ல.

3. பட்டம்மாள் என்பது எனது பாட்டி. பட்டம்மாள் பெயரிலிருந்து எனது மூதாதையர்கள் பெயரிலோ அல்லது எனது தகப்பனார் பெயரிலோ எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா எண் 73 ஆகும். பட்டா எண் 73 என்பதை உறுதிப்படுத்த எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் தவறு என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா இந்நாள் வரை பட்டம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிஸ்தி ரசீதில் (2வது ஆவணம்) பட்டா எண் 73 – மதுராம்பாளுக்காக செலுத்தப்பட்டது என்று உள்ளது என்றால் சரியல்ல.

4. நான் மதுராம்பாளுக்காக செலுத்தப்பட்டது என்று கூறினால் தவறு என்றால், எனது தந்தை 1988ல் மதுராம்பாளுக்காக கிஸ்தி செலுத்தினார், நான் 2014ம் வருடத்திற்கு பட்டம்மாள் பெயரில் கிஸ்தி செலுத்தியுள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணத்தை தவிர எங்களது அனுபவத்தில் தான் தாவா சொத்து உள்ளது என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் சண்முகம் பெயரில் உள்ளதால் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல, அந்த ஆவணம் பட்டம்மாள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது.

5. தாவா சொத்தில் உள்ளதாக சொல்லப்படும் மோட்டார் சர்வீசுக்கு இலவச மின்சாரம் என்றால் சரிதான். இலவச மின்சாரம் என்பது அரசின் சார்பில் பட்டாதாரர் பெயரில் தான் வழங்கப்படும், இந்த வா.சா.ஆ.4 என்பது சண்முகம் பெயரில் உள்ளதால் இந்த ஆவணத்தின் மூலம் நான் எந்த பரிகாரமும் பெற முடியாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்பது 1.95 ஏர்ஸ். நான் பட்டம்மாளின் வாரிசுதாரர் என்றால் சரிதான். அதன்

அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பட்டம்மாளுக்கு மணிமேகலை, ரவிச்சந்திரன், நடராஜன், மணிவண்ணன், செல்வகுமார் இவர்களைத் தவிர வேறு யாரும் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான்.

6. இந்த வழக்கு சொத்தை மேற்கண்ட பட்டம்மாளின் வாரிசுகள் தான் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்று வழக்குரையில் எந்த இடத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் தகராறுகள் நடந்து அது சம்மந்தமாக புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் என்பது வழக்கு சொத்தில் உள்ள மின்மோட்டாரின் மின் வயர்களை நாங்கள் எடுத்துச்சென்றதால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

7. நான் காவல் நிலையத்தில் சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துகொள்கிறேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது இங்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. OS.209/2018, OS.240/2019 வழக்கிற்கு பின்பு 4ம் பிரதிவாதி தாவா சொத்தில் பயிர் செய்ததை நான் கேட்க சென்றதில் தகராறு ஏற்பட்டு அது சம்மந்தமாக புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் என்னால் புகார் கொடுக்கப்பட்டு அதனால் 4ம் பிரதிவாதி சிறையில் அடைக்கப்பட்டார் என்றால் சரிதான். வழக்கு சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளதால் தான் எனக்கும் பிரதிவாதிகளுக்கு அடிக்கடி தகராறு ஏற்படுகிறது என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்தை பொறுத்த தகராறைத் தவிர வேறு எந்த தகராறும் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய அனுபவத்திலும் வசத்திலும் உள்ள சொத்தை பிரதிவாதிகள் வீணாக பிரச்சனை செய்ய மாட்டார்கள் என்றால் சரியல்ல.

8. எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் இந்த நீதிமன்றத்தில் 3

வழக்குகள் நடைபெற்று வருகிறது. பிரதிவாதிகள் 2018ல் வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் நாங்கள் மற்ற 2 வழக்குகளையும் தாக்கல் செய்தோம் என்றால் அவர்கள் போலி ஆவணங்கள் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர், அதற்காக நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். போலி ஆவணங்கள் சம்மந்தமாக காவல் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ தனிப்பட்ட புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, கொடுக்கப்பட்டுள்ளது. நான் கொடுத்த புகாரானது உண்மையாக இருந்திருந்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பார்கள், அவ்வாறு இல்லாததால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

9. பட்டம்மாள் இறந்ததற்காக வா.சா.ஆ.5 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணம் நடராஜன் பெயரில் உள்ளது என்றால் தற்போது நடராஜன் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 ல் மின் இணைப்பு எண் 55605330 என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் மின் இணைப்பு எண் 556053164 என்று உள்ளது என்றால் சரிதான், ஆனால் வா.சா.ஆ.4 மின் இணைப்பு எண் நடராஜன் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளது. எனவே வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டதல்ல என்றால் நடராஜன் பெயரில் உள்ளது மட்டும் சம்மந்தப்பட்டது.

10. நடராஜன் தற்போது இறந்துவிட்டார். வழக்கு ஆவணங்கள் நடராஜன் பெயரில் உள்ளதால் நடராஜனின் வாரிசுகள் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் வருவார்கள். தாவா சொத்துக்களின் மூல ஆவணங்கள் மற்றும் அனுபவம் குறித்த ஆவணங்கள் சம்மந்தமாக நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால் கடந்த ஓராண்டு காலமாக நான் நிலத்திற்கு

செல்லவில்லை, அதனால் எனக்கு தெரியாது. தற்போது தாவா சொத்து பயிரிடப்பட்டுள்ளதா அல்லது தரிசாக உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11. தாவா சொத்தின் ஒரு பகுதியில் ஓதவந்தான்குடியைச் சேர்ந்த குமார் என்பவர் பருத்தி சாகுபடி செய்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் கடந்த ஓராண்டு காலமாக எனக்கு தெரியாது. தாவா சொத்தின் ஒரு பகுதியில் பிரதிவாதிகளும் மற்றொரு பகுதியில் ஓதவந்தான்குடியைச் சேர்ந்த குமார் என்பவரும் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஓதவந்தான்குடியைச் சேர்ந்த குமார் என்பரைத் தெரியுமா என்றால் தெரியும். ஏற்கனவே இடைக்கால உறுத்துக்கட்டளை நிலுவையில் உள்ளபோது தாவா சொத்துக்கள் என்னிடம் உள்ளது என நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது சரியல்ல என்றால் சரியல்ல. எனக்கு பரிகாரம் கிடைக்க வேண்டுமென்றால் OS.209/2018 வழக்கில் சுவாதீன் மீட்பு பரிகாரம் கேட்கப்படவேண்டும் இல்லையென்றால் அந்த வழக்கில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 13.42)**